650

பி ஸ்ரீநிவாசன்

650

18 DEC 1957

MADRAS

# புத்தகம் தயார்

க்கிய வரிசை 5

M14
N57
68589

அமுத நிலையம்

முதல் பதிப்பு—நவம்பர் '57
அமுதம்—150
முதியோர் இலக்கியம்—5
உரிமை பதிவு

விலை 75 ந. பை.

நேஷனல் ஆர்ட் பிரஸ், தேனும்பேட்டை, சென்னை-18.

முதியோர் இலக்கிய வரிசை 5

# புத்தகம் தயார்

(அச்சுவேலையும் புத்தகத் தயாரிப்பும்)

தம்பி ஸ்ரீநிவாசன் எல்.பி.டி.

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்
தேனும்பேட்டை :: சென்னை 18

68589

# பொருளடக்கம்

பக்கம்

புத்தகத்தின் பயன் 1

அச்சுவேலை 4

- அச்சுவேலையின் தத்துவம் 7
- வேறுவகை அச்சுமுறைகள் 9
- தனி எழுத்து முறை 11
- அச்சு எழுத்து 14
- அச்சு அடுக்கும் கருவிகள் 16
- அச்சடிக்கும் இயந்திரங்கள் 19
- காகிதம் 29
- புத்தகக்கட்டு 33

புத்தகத் தயாரிப்பு 37

- ஆசிரியரும் பதிப்பாளரும் 38
- எழுத்தாளர் கை-ஏடு 40
- அச்சுத் திருத்தங்கள் 44
- புத்தகத்தின் விலை 45
- நூல்-விற்பனை 48
- மறுபதிப்புக்கள் 50
- மலிவு நூல்கள் 51
- அற்புத விளக்கு: மாயக்குகை 53

'எழுதுகோல் தெய்வம், இந்த எழுத்தும் தெய்வம்'
—பாரதி

# புத்தகத்தின் பயன்

இது ஒரு புத்தகம்.

இன்று இதைப் போல எத்தனையோ புத்தகங்கள் தயாராகின்றன. இன்னும் தினம் தினம் புதுப் புதுப் புத்தகங்கள் நிறைய வெளிவரும்.

நமது முன்னோர் காலத்தில் இருந்ததை விட இப்போது புத்தகங்கள் நிறைய வெளிவருகின்றன. நமது காலத்தில் படிப்பவர் தொகை அதிகம். புத்தகத்தைப் பயன்படுத்துவோர் தொகை அதிகம், பயன்படுத்தத் தெரிந்தவர்கள் (படிக்கத் தெரிந்தவர்கள்) அதிகமாகி வருகிறார்கள்.

பழங்காலத்தில் கர்ணபரம்பரை யாகக் கற்ற விஷயங்களை இப்போது புத்தகத்திலுல் அறிய முடிகிறது. தலை முறை தலைமுறையாக நமது நாட்டில் பாடப்பட்டு வரும் பக்தி பாடல்களைப் புத்தகத்திலுல் அறியலாம். நமது பழம் பெரும் இலக்கியங்களைப் புத்தகத்திலுல் அறிந்து அநுபவிக்க முடிகிறது. எல்லா வகையான தொழிலைப் பற்றிய நுணுக் கங்களையும் புத்தகத்திலுல் இன்று அறிந்து பயன்பெற முடிகிறது.

உலகில் இதுவரை நடந்தநிகழ்ச்சி களையும் இப்போது நிகழும் நிகழ்ச்சி களையும் புத்தகங்கள் நிரந்தரமாகக் குறித்து வைக்கின்றன.


கல்வியைப் புகட்டுகிறது, அதை வளர்க்கிறது; தொழிலை அறிய உதவு கிறது, அதில் திறமை அடையத் துணைபுரிகிறது; உல்லாசம் ஊட்டு கிறது, மனத்திற்கு நிம்மதி அளிக்

கிறது; சிந்தனையைத் தெளிவாக்கு கிறது, சிந்திக்கத் தூண்டுகிறது; இன்று நம் மனத்தில் எழும் எண்ணங் களை வருங்காலத்தாருக்கும் எட்ட வைக்கிறது—இவ்வளவும் செய்கிறது புத்தகம்.

நமது வாழ்க்கையில் இன்றியமை யாத ஒன்று புத்தகம்.

# அச்சு வேலை

இன்று ஆயிரக் கணக்கிலும் லக்ஷக் கணக்கிலும் புத்தகங்களைத் தயாரிக்க முடிகிறது. அச்சுத் தொழிலால் இது சாத்தியமாகிறது. முற்காலத்தில் இந்த வசதி இருக்கவில்லை. குருமூலம் சீடர்கள் வாய்மொழியாகக் கல்வி கற்பார்கள். அப்படியே பரம்பரை பரம்பரையாகக் கல்வி பரவியது. எழுதவேண்டியவைகளை ஏட்டிலே, எழுத்தாணியால் எழுதினார்கள். நிரந்தரமாக யாவரும் படிக்கவேண்டிய விஷயங்களைக் கல்லிலே வெட்டினார்கள்; தாமிரத் தகட்டிலே பொறித்தார்




அச்சுவித்தை தோன்றுமுன் நூல் எழுதப் பயன்பட்ட ஏடும் துணிச்சுருளும். அச்சுவித்தை தோன்றியபின் பயன்படும் இரண்டுவகை எழுத்துக்களையும் படத்தில் காணலாம்.

கள். சில நாடுகளில் இலைகளும், துணிகளும் தோலும்கூட எழுதும் 'கருவி'களாகப் பயன்பட்டன. பிறகு காகிதம் செய்யும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. அப்போதுகூட அச்சுவித்தை தோன்றவில்லை.

பழங்காலத்திலே நீதிநூல்களையும் பிற இலக்கியங்களையும் சாதனங்களை

யும் ஒவ்வொரு பிரதியாகக் கையால் எழுதினார்கள். அப்போதெல்லாம் ஒவ்வொரு புத்தகமும் ஒரு கையெழுத்துப் பிரதி. ஒரு புத்தகத்தைப் பல பிரதிகள் எடுக்க வேண்டுமானால் பலமுறை அதைத் திரும்பத் திரும்பக் கையால் எழுதியாகவேண்டும்.

இதெல்லாம் அச்சுவேலை கண்டு பிடிக்கும் காலத்துக்கு முன்.

இப்போதோ?

தினசரி வாழ்க்கையின் ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியிலும் அச்சுத் தொழில் (அல்லது அதையொட்டிய தொழில்) நமக்குப் பயன்படுகிறது.

அச்சுத்தொழில் சமீப காலத்தில் தான் மிகுந்த முன்னேற்றம் அடைந் திருக்கிறது. மூன்று நான்கு தலைமுறை களுக்கு முன்பு சாதாரணமாக இருந் தது அந்தத் தொழில். பல விஞ்ஞானி களுடைய அறிவும் அநுபவமும்


உழைப்பும் ஆராய்ச்சியும் சேர்ந்ததால் அத்தொழில் சிறந்த நிலைக்கு உயர்ந்துள்ளது.

அச்சு வேலை வெறும் வேலை மட்டும் அல்ல; கலைகள் அனைத்தையும் போற்றிப் பாதுகாக்கும் பெரும் கலை அது. அச்சு வேலை வெறும் கலை மட்டும் அல்ல; தொழில்கள் அனைத்தையும் சீராக நடத்திச்செல்லும் பெரும் தொழில் அது.

## அச்சு வேலையின் தத்துவம்

அச்சுவேலையின் தத்துவம் மிகவும் எளிதானது.

மை தடவிய கைவிரலைக் காகிதத்தில் அழுத்தி வைத்தால் விரல் ரேகைகள் தெளிவாகப் பதிகின்றன, அல்லவா?



இதுவே அச்சு வேலையின் தத்துவம். கை ரேகைகளுக்கு இடையே நுண்ணிய பள்ளங்கள் இருக்கின்றன. தடவும் மை பள்ளங்களில் படாமல் உயர்ந்துள்ள ரேகைகளில் மட்டும் ஒட்டிக் கொள்கிறது. காகிதத்தில் கை பதியும் போது மை பதிந்த ரேகையே அதில் ஒட்டுகிறது. பக்கத்தில் உள்ள பள்ளம் ஒட்டுவதில்லை. விரலை எடுத்தவுடன் ரேகை அடையாளம் மட்டும் காகிதத்தில் விழுகிறது.

இதே போல்தான் அச்சு வேலையிலும். காகிதத்தில் என்னென்ன எழுத்துக்களும் படங்களும் விழ வேண்டுமோ அந்தப் பகுதிகள் மட்டும் அச்சில் சற்றே உயரமாக இருக்கும். அவற்றின் மீது மட்டும் மை தடவப் படும். இம்மாதிரி அச்சு முறைக்கு 'லெட்டர் பிரஸ் அச்சுமுறை' என்று பெயர்.

நமது நாட்டில் சாதாரணமாக எல்லாப் புத்தகங்களும் பத்திரிகைகளும் இந்த லெட்டர்பிரஸ் முறையில் தான் அச்சாகின்றன.

## வேறு வகை அச்சு முறைகள்

புத்தகங்களை அச்சடிக்க லெட்டர் பிரஸ் முறை பயன்படுகிறது. வேறு சில வகை அச்சுமுறைகளும் பழக்கத்தில் இருக்கின்றன.

'லித்தோகிராபி' அல்லது 'போட்டோ ஆப்செட்' என்று ஒருவகை அச்சு முறை இருக்கிறது. இம்முறையில் படங்களை அழகாகவும் சிக்கனமாகவும் அச்சடிக்கலாம். இம்முறையில்தான் சினிமா சுவரொட்டி விளம்பரங்களும் பெரிய படக் காலண்டர்களும் அச்சாகின்றன, ஆனால் புத்தகங்களை அச்சடிக்க இந்த முறையை அதிகம் பயன்படுத்துவது கிடையாது.

இதைத் தவிர, 'போட்டோகிராவியர்' என்றும் 'கோலோடைப்' என்றும் சில முறைகளில் அச்சடிக்கலாம். போட்டோகிராவியர் முறை நம் நாட்டில் பம்பாயில் டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை அச்சகத்தில் இருக்கிறது. ஆனல் கோலோடைப் முறை நம் நாட்டில் எங்கும் இல்லை. இந்த இரண்டு முறைகளும் புகைப்படங்களையும் வர்ணப் படங்களையும் அழகாக அச்சிட ஏற்றவை. நமது அரசாங்கத்தில் சில ஆண்டுகளுக்கு முன் காந்திஜியின் நினைவாக வெளியிட்ட தபால்தலைகளை போட்டோகிராவியர் முறையில்தான் சுவிட்ஜர்லாந்து நாட்டில் அச்சிட்டனர்.


சில புத்தகங்களில் புத்தகத்தின் எழுத்துப் பகுதியை மட்டும் லெட்டர் பிரஸ் முறையில் அச்சடிப்பார்கள். உள்ளே காணப்படும் புகைப்படங்களை போட்டோகிராவியர் அல்லது

போட்டோ ஆப்செட் முறையில் தனிக் காகிதத்தில் அச்சடிப்பார்கள். மேல் அட்டையையும் இந்த முறை ஒன்றில் அச்சடிப்பதும் உண்டு.

## தனி எழுத்து முறை

லெட்டர்பிரஸ் முறைதான் பல காலமாகப் பழக்கத்தில் இருந்துவரும் முறை. இதன்படி அச்சு எழுத்துக்களை ஒவ்வொன்ருக அடுக்கி, பல வரிகள் இம்மாதிரி சேர்ந்ததும் பக்கங்களாகக் கட்டுவார்கள்.

அச்சுத்தொழில் தொடங்கிய புதி தில் இந்தமாதிரி அச்சு எழுத்துக்கள் இருக்கவில்லை. எந்த விஷயத்தை அச்சிட வேண்டுமோ அதை ஒரு மரக் கட்டையில் (தலைகீழாக) செதுக் கிக் கொண்டு பிறகே அச்சடித்தார்கள். ஒரு புத்தகத்தில் பலநூறு பக்கங்கள் இருக்கலாம். ஒவ்வொரு பக்கத்தையும்-




கையினுல் அச்சுக் கோத்தல். இடதுகையில் இருப்பது 'ஸ்டிக்'. அச்சுப்பெட்டியிலுள்ள குழி ஒவ்வொன்றிலும் ஓர் எழுத்து இருக்கும். மேல்பெட்டியின்மீது அச்சுக் கோத்த வரிகளைக் கொண்ட 'காலி'யும் கையெழுத்துப் பிரதியும் உள்ளன.

அதிலுள்ள அத்தனை எழுத்துக்களையும் பொறுமையுடன் செதுக்குவது எவ்வளவு சிரமமான காரியம்! எவ்வளவு செலவு! இந்த நிலையில்தான் 'தனி எழுத்து' முறை கண்டுபிடிக்கப்பட்டது. 1450-ஆம் ஆண்டு வாக்கில்

கட்டன்பர்க் என்ற ஜெர்மானியர் இதைக் கண்டுபிடித்ததாகக் கூறுகின்றனர்.

இந்தத் தனி—எழுத்து முறைப்படி ஒவ்வோர் எழுத்தும் ஒரு தனி அச்சில் வார்க்கப்பட்டிருக்கும். ஒரு பக்கத்தை அச்சிடவேண்டுமானல் அதற்குத் தேவையான எழுத்துக்களைக் கோத்து அச்சிடலாம். எழுத்துக் கோக்கும் போது ஏற்படும் தவறுகளை உடனுக்குடன் திருத்துவது எளிது. மேலும் அச்சிட்ட பின், எழுத்துக்களை வீணக்க வேண்டாம், அவற்றைக் கலைத்து, மீண்டும் மற்றொரு பக்கத்துக்குத் தேவையான படி அடுக்கிக் கொள்ளலாம். சேர்க்கவும் கலைக்கவும் ஏற்ற இந்தத் தனி—எழுத்து முறையை 'நகரும் எழுத்து' என்றும் சொல்வதுண்டு.



ஓர் அச்சு எழுத்து

இந்த முறை கண்டுபிடிக்கப்பட்டது அச்சுத் தொழில் வளர்ச்சியில் ஒரு முக்கிய திருப்பம்.

## அச்சு எழுத்து

தனி எழுத்துக்களை ஒன்றின் பக்கத்தில் ஒன்ருக அடுக்கி எழுத்து வரிசைகளை அமைக்கும் முறைதான் இப்போது எங்கும் பழக்கத்தில் இருக்கிறது.

இந்த எழுத்துக்களைப் பல முறை திரும்பத் திரும்பப் பயன்படுத்த வேண்டியிருப்பதால் அவை உறுதியான உலோகத்தில் வார்க்கப்படுகின்றன. முதலில் எழுத்துக்களைத் தூய காரீயத்திலேயே வார்த்தார்கள். பல காலம் ஆராய்ச்சிகள் நடத்தி, காரீயத்துடன் அன்டிமனி, வெள்ளீயம் என்ற உலோகங்களையும் தகுந்த அளவில் சேர்த்தால் நல்லது என்று கண்டுபிடித்து,

அத்தகைய உலோகக் கலவையையே இப்போது எல்லாரும் பயன்படுத்தி வருகிறார்கள்.

அச்செழுத்துக்களுக்குப் பெயர்கள் உண்டு. இந்தப் புத்தகம் **பாரதி** என்ற பெயருள்ள அச்செழுத்தில் அடுக்கப்பட்டுள்ளது.

இதன் அளவு 18 பாயிண்ட். ஒரு பாயிண்ட் என்பது ஓர் அங்குலத்தில் 72–ல் ஒரு பகுதி. நான்கு அல்லது ஐந்து பாயிண்ட் முதல் 72 பாயிண்ட் வரை உலோக எழுத்துக்கள் வார்க்கப் படுகின்றன. சாதாரண புத்தகங்கள் 11 அல்லது 12 பாயிண்ட் எழுத்தில் அச்சாகும். அத்தியாயத் தலைப்பு முதலியவை 18 அல்லது 24 பாயிண்டில் அச்சாகும். குழந்தைப் புத்தகங்கள் முதலியவை பெரிய எழுத்தில், நிறைய இடம் விட்டு விட்டு அச்சடிக்கப்படும்.

# கல்வி சிறந்த செல்வம்

**புத்தகம் படிப்பது நல்ல பழக்கம்**


அச்சுவேலை மனித சரித்திரத்தில் முக்கிய நிகழ்ச்சி

*இது சிறிய எழுத்தாக இருந்தாலும் தெளிவாக இருக்கிறது*

அளவிலும் வகையிலும் வேறு பட்ட சில மாதிரி எழுத்துக்களை மேலே காணலாம்.


## அச்சு அடுக்கும் கருவிகள்

தனித்தனி எழுத்துக்களை எடுத்து எடுத்து, கை ஒடிய அடுக்குவதற்குப் பதிலாக, இயந்திரங்கள் மூலம் அடுக்க முடியுமா என்று பலர் நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் ஆராய்ச்சி செய் தார்கள். அம்முயற்சியின் பலனாகத் தோன்றியவைதாம், 'லைனோடைப்' 'மானோடைப்' என்ற அச்சுக் கோக் கும் கருவிகள்.



'லைனேடைப்' என்னும் அச்சு அடுக்கும் கருவி. டைப்ரைட்டர் போலிருக்கும் பகுதியில் தேவையான எழுத்துக்களைத் தட்டினுல் அதற்கேற்ற அச்சு எழுத்துக்கள் கருவியின் உள்ளே திரண்டு, ஒவ்வொரு வரி முடிந்ததும் ஒரு வார்ப்பாக காலியில்வந்துவிழும். பல இந்திய மொழிகளை அச்சடுக்க இக் கருவி பயன்படுகிறது.

இந்த இரண்டு கருவிகளிலும் அச்சுக்கோப்பதற்கு சாதாரண டைப் ரைட்டரில் வேலை செய்வதுபோல விரல் களால் தட்டினுல் போதும். கருவி தானுகவே இயங்கும். லைனே டைப்



இது மானேடைப் என்னும் அச்சடுக்கும் கருவி. படத்திலுள்ள கருவியில் தேவையான எழுத்துக்களைத் தட்டினல், ஒரு சுருள் காகிதத்தில் அவை பதியும். மற்ருெரு கருவியில் அத் தாளைக் கொடுத்தால், தனி எழுத்துக்கள் வார்க்கப்பட்டு காலியில் வந்து சேரும்.

கருவியில் எழுத்துக்கள் ஒன்றுகூடி ஒரு வரி ஆனதும், ஒரே உலோகத் துண்டாக வார்க்கப்படும். ஆனல் மானேடைப் கருவி ஒவ்வோர் எழுத்தையும் தனித்தனியே வார்த்துத்தரும்.

இந்தக் கருவிகளால் அச்சுகோக்கும் வேலை சுலபமாகவும் விரைவாகவும் நடைபெறுகிறது. முதலில் ஆங்கில மொழியை அச்சடுக்கவே இக் கருவிகள் பயன்பட்டன. இன்று இந்திய


மொழிகள் பலவற்றிலும் இக்கருவி களைக் கொண்டு அச்சுக்கோக்க முடி கிறது.

## அச்சடிக்கும் இயந்திரங்கள்


அச்சு எழுத்தைக் காகிதத்தில் பதிவாக்கும் கருவிதான் அச்சு இயந் திரம். இதில் சிலவகைகள் உண்டு.

தரையில் அச்சுக்கோலம் போடும் போது, சல்லடை போன்ற ஒரு தட்டில் கோலமாவை வைத்து ஒரு தட்டுத் தட்டிக் கோலம்போட்டால் என்ன ஆகிறது? அப்போது முழுக் கோலமும் ஒரே தட்டு தட்டும்போதே இடப்படு கிறது.

வேறு விதமாகவும், மாவடைத்த குழலைத் தரையில் உருட்டியும், கோலம் இடலாம் அல்லவா? இந்த முறையில் இடும்போது குழல் உருள உருள, கோலம் சிறிது சிறிதாக உருவாகிறது.





**பிளாடன் கருவியின் தத்துவம்**




**ஒரு சாதாரண பிளாடன் இயந்திரம். இதை இயந்திர சக்தியாலும் ஓட்டலாம். காலால் தட்டியும் ஓட்டலாம்.**

இதுபோலவே அச்சடிப்பதிலும் இரண்டு முக்கிய முறைகள் உண்டு. 'பிளாடன்' எனப்படும் சமதளமுறை ஒன்று. இதன் படி மைபூசிய அச்சு எழுத்தின்மேல் காகிதத்தை இட்டு, சமதள உலோகப் பலகையை அழுத்தி, அச்சடிப்பார்கள்.

புத்தகங்களின் மேல் அட்டை, தனிப்படங்கள் போன்ற சிறு பரப்புள்ள காகிதங்களை இவ்வகை இயந்திரங் களில் அச்சடிக்கலாம்.




சிலிண்டர் கருவியின் தத்துவம்




ஒரு சிலிண்டர் அச்சுக் கருவி

பல பக்கங்களை ஒரே பெரிய தாளில் அச்சடிக்க 'சிலிண்டர்' எனப் படும் உருளை இயந்திரங்களைப் பயன் படுத்துவார்கள். இந்த முறைப்படி மை தடவிய அச்சு எழுத்தின் மேல் ஓர் உருளை சுழலும். அச்சு எழுத்துக்கும் உருளைக்கும் இடையில் செலுத்தப் படும் காகிதத்தில், உருளையின் அழுத் தத்தால் அச்சு பதிவாகும். காகிதத்தில்,

ஒரு கோடி முதல் மற்றொரு கோடி வரை, துளித் துளியாக அச்சு ஏறும்.

பக்கங்களின் அளவுக்கும் இயந்திரத்தின் அளவுக்கும் தகுந்தபடி 4 அல்லது 8 அல்லது 16 அல்லது 32 பக்கங்களை ஒரே சமயத்தில் இந்த இயந்திரத்தில் அச்சடிக்கலாம். சாதாரணமாகப் புத்தகங்கள் எல்லாம் சிலிண்டர் அச்சு இயந்திரங்களில்தான் அச்சாகின்றன.

இவை தவிர, 'ரோடரி' என்னும் மிகப் பெரிய அச்சு இயந்திரங்கள் உள்ளன. அவற்றில்தான் தினத்தாள்கள் அச்சாகின்றன. அந்த முறையிலும் உருளையில் சுற்றப்பட்டு அதன் அழுத்தத்தால்தான் காகிதம் அச்சடிக்கப்படுகிறது. ஆனால் அச்சு எழுத்தும் மற்றோர் உருளை வடிவத்தில் இருக்கும்! நியூஸ்பிரிண்ட் எனப்படும் மலிவுத் தாளில் பல்லாயிரக் கணக்காகவும்



தினசரித்தாள்களை அச்சிடும் ரோடரி இயந்திரம்

விரைவாகவும் அச்சிட ஏற்ற கருவி ரோடரி அச்சு இயந்திரம்.


பிளாடன், சிலிண்டர், ரோடரி என்ற எல்லாவகை அச்சு இயந்திரங்களும் மின்சார சக்தி மூலம் இயங்குகின்றன. சில சிறிய பிளாடன்களை மின்சார உதவி இன்றி, தையல் இயந்திரம் போல, காலால் தட்டித் தட்டியே இயங்க வைப்பதும் உண்டு. இவற்றை 'டிரடில்' என்பார்கள். ('டிரடில்' என்

68589

ருல் காலால் அழுத்துவது என்று பொருள்)

எழுத்துக் கோக்கும் முறையை முன்பே கவனித்தோம். வரி வரியாகப் பல வரிகள் எழுத்து அடுக்கிய பிறகு, அவற்றை நீண்ட முறம் போன்ற காலி என்னும் தட்டில் (பக்கம் 12 பார்க்க) வைத்து, நீண்ட காகிதத்தில் புரூப் எடுத்துப் பார்ப்பார்கள். அதில் திருத்தங்கள் செய்த பிறகு அந்த நீண்ட காலிகளைச் சிறு சிறு அளவில், பக்கம் பக்கமாகப் பிரித்து எடுப்பார்கள்.


8 அல்லது 16 பக்கங்கள் சேர்ந்ததும் அவற்றை ஓர் இரும்புச் சட்டத்தில் வைத்து முடுக்குவார்கள். பெரிய தாள்களில் ஒரே சமயத்தில் 8 அல்லது 16 பக்கம் அச்சிடுவதுதான் சிக்கனமான முறை. இவ்வாறு பல பக்கங்கள் அச்சிட்ட தாளை, பக்கத் தொடர்ச்சி வரும்படி மடிப்பார்கள். இப்படி மடிக்




அச்சடிப்பதற்காக 16 பக்கங்களை முடுக்கும் முறை. ஒரு பெரிய தாளில் இங்கு அமைத்துள்ளபடி அச்சடித்துக் கொண்ட பிறகு அதை வகையாக மடித்தால் 1 முதல் 16 பக்கம் வரை தொடர்ச்சியாக அமையும்.

கப்பட்ட தாளுக்கு 'செக்ஷன்' அல்லது 'பாரம்' என்று பெயர். சாதாரணமாக, புத்தகங்களில் 17, 33, 49, 65 ஆகிய பக்கங்களின் கீழே சிறு எண் அல்லது எழுத்து இருப்பதை நீங்கள் காணலாம். அந்தக் குறிப்பு, அந்தத் தாள் அந்தப் புத்தகத்தின் எத்தனையாவது செக்ஷன் என்பதையே குறிக்கிறது.

ஓவியர் வரையும் படங்களையும் புகைப்படங்களையும் அச்சிட, அவற்றை முதலில் 'பிளாக்' செய்ய வேண்டும். பிளாக் என்பது போட்டோ எடுப்பது போன்ற முறையில் தயாரிக்கப்படும் உலோகத் துண்டு. இதில் அச்சிட வேண்டிய படம் தலைகீழாக அமைந்திருக்கும். பிளாக் தயாரிக்கும் தொழில், அச்சு வேலைக்கு உதவும் பெருந் தொழிலாக இன்று வளர்ந்து வருகிறது. கோடுகளால் ஆன (லைன்)



ஒரு பிளாக்

படங்கள், புள்ளிகளால் ஆன புகைப் படம் போன்ற படங்கள் (ஆப் டோன்) என இருவகைப் படங்களுக்கும் ஏற்ற பிளாக்குகள் உள்ளன. இப் பக்கத்தில் மேலே உள்ள படம் லைன் பிளாக்கைக் கொண்டும் 'பலவகைகளில் பைண்ட் செய்த புத்தகங்கள்' என்ற படம் ஆப் டோன் பிளாக்கைக் கொண்டும் அச் சாகியுள்ளன.

ஒரு படத்தைப் பல வர்ணங்களில் அச்சிட வேண்டுமானால் ஒவ்வொரு வர்ணத்துக்கும் ஒரு பிளாக்குத் தயாரிப்பார்கள். அந்தந்த வர்ணத்தில் அச்சாக வேண்டிய பகுதி, அந்தந்த

வர்ண பிளாக்கில் இருக்கும். எத்தனை வர்ண பிளாக்குகள் இருக்கின்றனவோ அத்தனை முறை காகிதத்தை அச்சடிக்க வேண்டும். மூவர்ணப் படங்கள் என்பவை, மஞ்சள், சிவப்பு, நீலம் ஆகிய வர்ண பிளாக்குகளின் உதவியால் தயாராகும் ஆப்டோன் படங்கள்.

**காகிதம்**

சுவர் இன்றிச் சித்திரம் இல்லை. காகிதம் இன்றி அச்சுவேலை இல்லை. அச்சுத் தொழில் ஏற்படுவதற்கு முன்னமேயே காகிதம் பழக்கத்திற்கு வந்து விட்டது.

காகிதம் பலவகைப்படும். அச்சடிக்கப் பயன்படும் காகிதம் சாதாரணமாக மரக்கூழினின்று தயாரிக்கப்படுகிறது. எழுதுவதற்குப் பயன்படும் ‘பாண்ட்’, ‘லெட்ஜர்’ முதலிய காகிதங்கள் துணிக்கந்தையிலிருந்து தயாரா

கின்றன. தினசரித்தாள்களையும் பத்திரிகைகளையும் அச்சடிக்கப் பயன்படும் நியூஸ்பிரின்ட் காகிதம் மூங்கில், சணல், வைக்கோல் போன்ற எளிய தாவரக் கூழிலிருந்து தயாராகிறது. உயர்ந்த புகைப்படம் போன்ற படங்கள் அச்சிடப் பயன்படும் 'சூபர் காலண்டர்ட்' அல்லது 'ஆர்ட்' காகிதங்கள் வழவழப்பாக இருக்கும்படி மெல்லிய ரசாயனப் பூச்சுடன் தயாரிக்கப்படும்.

நியூஸ்பிரின்ட் காகிதம் பெரிய பாயைப் போல் உருளைகளாகச் சுற்றப்பட்டு காகித ஆலையிலிருந்து வரும். நீண்ட பாயாகவே அதை இயந்திரத்தில் நுழைத்து அச்சிட வசதியாக ரோடரி அமைந்திருக்கிறது.

ஆனல் மற்ற வகைக் காகிதங்கள் குறிப்பிட்ட சில அளவுகளில் வெட்டப்பட்டு 500 அல்லது 480 தாள்கள் கொண்ட கட்டுகளாக விற்

கப்படுகின்றன. இவற்றுக்கு ரீம் என்று பெயர். காகிதம் பவுண்டு இத்தனை நயா பைசா என்று விலை வைத்து விற்கப்படும்.

புத்தகங்களை அச்சிட முக்கியமாகப் பயன்படும் காகித அளவுகள் மூன்று. அவையாவன:


1. **கிரவுன்**. 20 அங்குல நீளம், 15 அங்குல அகலம் உள்ள தாள். இரட்டை கிரவுன் (30 அங் நீளம், 20 அங் அகலம்) தாள் நிறையப் பழக்கத்திலுள்ள தாள். கிரவுன் தாளில் அச்சடித்து அதில் எட்டிலொரு பகுதியாக புத்தக அளவு அமைந்திருப்பதை சாதாரணமாகக் காணலாம். அந்தப் புத்தகங்கள் சுமார் 5 அங்குல அகலம், 7-½ அங் நீளம் இருக்கும்.

2. **டிமை அல்லது டெம்மி** என்பது 17-½ அங்குல அகலம், 22-½ நீளம் உள்ள தாள். இதுவும் புத்தகத்

தயாரிப்பாளர் அதிகம் பயன்படுத்தும் காகிதம். அச்சிடும் சிக்கனத்திற்காக இரட்டை டிமை (22-½ அங் அகலம், 35 அங் நீளம்) அளவு காகிதம் உபயோகப்படும். இதில் தயாராகும் புத்தகங்கள் சுமார் ஐந்தரை அங்குல அகலம், எட்டே முக்கால் அங்குல நீளம் இருக்கும்.

3. **ராயல்** என்பது 20 அங்குல அகலமும் 27 அங்குல நீளமும் உள்ள தாள். சிலவகை ராயல் தாள் 25 அங்குல நீளமே இருக்கும். ராயல் தாளில் தயாராகும் புத்தகம் சுமார் 6-¾ அங்குல அகலம், 10 அங்குல நீளம் இருக்கும்.

குழந்தைப் புத்தகங்கள், படப்புத்தகங்கள், தேசப் படங்கள் போன்ற நூல்க்ள் இவற்றை விடப் பெரிய அளவில் வெளிவரும்.



பலவகைகளில் பைண்டு செய்த புத்தகங்கள்

## புத்தகக்கட்டு

தாள் தாளாக அச்சாகும் பகுதிகளை ஒன்று திரட்டி, அதற்குப் 'புத்தகம்' என்ற உருவத்தைக் கொடுக்கும் தொழிலே பைண்டிங் எனப்படும் புத்தகக்கட்டுத் தொழில். இது பொறுப்புமிக்க நுணுக்கமான வேலை. ஓர் அச்சிட்ட தாளிலுள்ள 8 அல்லது 16 அல்லது 32 பக்கங்களைச் சீராக மடிப்பது ஒரு வேலை; அவ்வாறு மடித்த பல 'செக்ஷன்'களை ஒழுங்காகத் திரட்டுவது ஒரு வேலை; சேகரித்த செக்ஷன்களை நூலாலோ கம்பியாலோ தைப்பது

ஒரு வேலை. அதன் பின்பு அச்சடித்த அட்டையை மாட்டி, ஓரங்களை வெட்டு வது கடைசி வேலை. அப்போதுதான் புத்தகம் பார்வைக்கு அழகாக இருக்கும். பக்கங்களை ஒவ்வொன்றாகத் தள்ளிப் படிப்பதும் எளிதாக இருக்கும்.

ஒவ்வொருவகைப் புத்தகத்திற்கும், அதன் தன்மைக்கு ஏற்றபடி, பைண்டிங் தொழிலில் எத்தனையோ நுணுக்கமான காரியங்கள் நடைபெற வேண்டும். சில புத்தகங்கள் சாதாரண காகித அட்டையுடன் விளங்கும். சிலவற்றிற்கு கனத்த, உறுதியான அட்டை யிட்டு அதன் மேல் காகிதம் ஒட்டவேண்டும். சிலவற்றுக்கு காலிகோ எனப்படும் துணி போர்த்து ஒட்டவேண்டும். மிக உயர்ந்த புத்தகங்களை, தோல் போர்த்துக் கட்டுவதுண்டு.

புத்தகக்கட்டு வேலை புத்தகத்தின் வெளியழகை அதிகமாக்குகிறது. பல

வருஷகாலம் புத்தகம் உழைப்பதற்குக் காரணம் புத்தகக்கட்டின் உறுதியே.

அச்சிட்ட தாள்களை மடிக்கவும், மடித்த தாள்களைத் தைக்கவும் இயந்திரங்கள் உள்ளன. பல ஆயிரக்கணக்கான பிரதிகள் அச்சிடும்போது இக் கருவிகள் பயன்படுகின்றன.

எழுத்துக்கோப்பது, அச்சடிப்பது, அச்சான காகிதங்களை மடிப்பது, புத்தகங்களைப் பலவிதங்களில் தைப்பது, பசை தடவி ஒட்டுவது, அட்டையிட்டு மூடுவது, இலக்கமிடுவது—ஆகிய பல வேலைகளை விரைவாகவும் சிக்கனமாகவும் செய்யும் பல இயந்திரங்கள் இன்று புத்தகத் தயாரிப்புக்குத் துணைபுரிகின்றன. வேகமாகவும் மலிவாகவும் புத்தகம் தயாரிக்க இவை பயன்படுகின்றன.

உயர்ந்த முறையில் நூலை வெளியிடுவோர் பைண்டிங் வேலையைக் கையினுல் செய்வதையே விரும்புவர்.

பைண்டிங் கைவேலையில் வல்லவர்கள் நம் நாட்டிலும் பலர் உள்ளனர்.

'பைண்டர்' தமது வேலையைத் திறம்பட செய்து முடித்ததும் புத்தகம் விற்பனைக்குத் தயார் !

# புத்தகத் தயாரிப்பு

புத்தகத் தயாரிப்பு என்பது ஒரு தொழில் மட்டுமல்ல. அது ஒரு கலையுங் கூட. அது ஒரு சிறந்த சேவை என்று கூடச் சொல்லலாம்.

நாட்டிலே ஆண்டுதோறும் எல்லா மொழிகளிலும் பல ஆயிரம் புத்தகங்கள் வெளியாகின்றன. உலகம் முழுதும் ஆண்டுதோறும் சுமார் 500 கோடி நூல்கள் வெளியாகின்றனவாம்! கதைகளும் மற்றும் களிப்பூட்டும் நூல்களும் வெளிவருகின்றன. பாடப்புத்தகங்களும் தொழில்நூல்களும் வெளியாகின்றன. குழந்தை நூல்களும் வாழ்க்

கைச் சரிதங்களும் வெளியாகின்றன. பல புது நூல்களுடன் ஏராளமான பழம் நூல்களின் மறுபதிப்புகள் வெளியாகின்றன. பண்டை இலக்கியங்கள் புதுப் பதிப்புகளாக வெளியாகின்றன.

## ஆசிரியரும் பதிப்பாளரும்

புத்தகம் என்பது என்ன? எழுதும் ஆசிரியர், தாம் உலகுக்கு அறிவிக்க எண்ணும் கருத்துக்களை வெளியிடும் கருவியே அது. பலகாலம் ஆசிரியர் மனத்தில் எழுந்த சிந்தனையின் உரு புத்தகம், அவர் கற்பனையின் வடிவம் அது. ஆசிரியர் தாம் சொல்ல நினைப் பதை, காலத்தையும், தூரத்தையும் கடந்து, மற்றவருக்கு எட்டவைக்கிறார் புத்தகத்தின் மூலம்.

இத்தகைய புத்தகம் வெளிவருவது எப்படி? புத்தகத்தை எழுதுவது ஆசிரியர். அதை மக்களுக்கு சமர்ப்பிப்

பது வேருெருவர். ஆசிரியர் எழுதி யதை அச்சிட்டு, வெளியிடுபவர் அவர். நூலை எல்லா ஊர்களுக்கும் அனுப்பி, அதை அனைவரும் அறியும்படிசெய்பவர் அவர். அவர்தான் புத்தகப் பதிப்பாளர். புத்தகத் தொழிலில் முக்கியமானவர்.

மக்களுக்குத் தேவையான நல்ல நூல்களை நல்ல முறையில் வெளியிடு வதுதான் நல்ல பதிப்பாளரின் நோக்கம். நூல்களை இயற்றுவது எழுத்தாளர்கள். தயாரிப்பது அச்சாளர்கள். எழுத்தாளர், பதிப்பாளர், அச்சாளர் ஆகிய மூவரின் நல்முயற்சி ஒன்று கூடிஞல் நல்ல புத்தகம் வெளியாகும். இவர்களைத் தவிர ஓவியர், காகிதம் தயாரிப்போர், பிளாக் செய்வோர், நூல் விற்பனையா ளர்—ஆகிய பலரும் அவரவர் பணியை ஒழுங்காகச் செய்தால்தான் நல்ல புத்த கங்களைத் தயாரிக்கவும் வெளியிடவும் முடியும்.


## எழுத்தாளர் கை—ஏடு

நல்ல பதிப்பாளர்கள் சாதாரண மாக, மக்களிடையே பெயர் வாங்கிய ஆசிரியரின் நூல்களை வெளியிடுவார்கள். அது தவிர, புதிய எழுத்தாளர்கள் அனுப்பும் கை-ஏடுகளை ஆவலுடன் பார்ப்பார்கள். நல்ல விஷயம் எவர் மூலம் கிடைத்தாலும் வெளியிட ஆர்வத்தோடு இருப்பார்கள். பதிப்பாளரே குறிப்பிட்ட ஆசிரியர்களை அணுகி, குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றி நூல் எழுத வைப்பதும் உண்டு.

ஒரு நூலை வெளியிடுவது என்று முடிவு செய்தவுடன் பதிப்பாளர் நூலாசிரியருடன் ஒப்பந்தம் செய்து கொள்வார். அந்தக் குறிப்பிட்ட நூலை வெளியிடும் உரிமையைப் பெற்ற பதிப்பாளர் ஆசிரியருக்குத் தகுந்த சன்மானம் தர வேண்டும். மொத்தமாக ஒரு பெருந் தொகையை சில ஆசிரியர்கள் பெற்றுக்

கொள்வார்கள். ஆனால் பலரும் இந்த முறையை ஒப்புக் கொள்வதில்லை. நூல் விற்பனையில் ஒரு குறிப்பிட்ட சத வீதத்தை சன்மானமாகப் பெறுவதையே ஆசிரியர்கள் விரும்புகிறார்கள். இந்த முறைக்கு 'ராயல்டி' என்று பெயர். இந்த வகையான சன்மான முறையே பதிப்பாளருக்கும் ஆசிரியர்களுக்கும் சௌகரியமான முறை என்று இந்தத் துறையில் அநுபவம் பெற்றவர்கள் கருதுகிறார்கள். நூலை வெளியிட பதிப் பாளருக்கு அனுமதி கொடுத்தாலும் நூலின் காப்பிரைட் (பதிப்புரிமை) சாதா ரணமாக ஆசிரியரிடமே இருக்கும்.

வெளியிடவேண்டிய நூலை அச் சுக்கு அனுப்புமுன் பதிப்பாளர் அதை ஒரு முறை ஆழ்ந்து படிப்பார். நூல் எந்த விஷயத்தைப் பற்றியதோ அந்தத் துறையில் தேர்ந்தவர்களின் அபிப்பிரா யத்தையும் பெறுவார். பின்பு நூலில்


அச்சு எழுத்துக்களை ஒவ்வொன்ருகக் கோக்கும் போது தவறுகள் ஏற்படுவது சகஜம் அச்சடிப்ப தற்கு முன்னல் அந்தத் தவறுகளைத் திருத்த வேண்டும். இதற்காக அச்சுக் கோத்தவுடன் ஒரு "புருப்" எடுப்பார்கள். அந்த புருபையும் கையெழுத்துப் பிரதியையும் ஒப்பு நோக்குவோ ருக்கு என்று பெயர். அவர்கள் புருபில் செய்ய வேண்டிய திருத்தங்களைச் செய்வார்கள். அவர்கள் புருப் திருத்தப் ~~பயன்படுத்தும்~~ குறிகள் சில ~~சொற்றை~~ இந்தப் பக்கத்தில் காணலாம்.

இந்தக் குறிகள் சுமார் 70 உள்ளன. அவற்றை எழுத்தாளர், அச்சுக் கோப்பவர் புருப் படிப்பவர் முதலியோர் நன்கு அறிந்துகொள் ~~கொண்டால் நல்லது~~. அப்போது புருப்ரீடர் செய்ய நினைக்கும் திருத் தங்களை அச்சுக் கோப்பவர் புரிந்துகொள்ள முடியும்

*அச்சு எழுத்துக்களை அடுக்கும்போது பல தவறுகள் ஏற்படலாம். அவற்றைச் சீராக்கிய பிறகே அச்சடிக்க வேண்டும். பல தவறுகளுடன் உள்ள புருபில் செய்யப்பட்ட திருத்தங்களை மேல் படத்தில் காணலாம்.*

அச்சு எழுத்துக்களை ஒவ்வொன்றாகக் கோக்கும் போது தவறுகள் ஏற்படுவது சகஜம். அச்சடிப்பதற்கு முன்னால் அந்தத் தவறுகளைத் திருத்த வேண்டும். இதற்காக அச்சுக்கோத்தவுடன் ஒரு 'புரூப்' எடுப்பார்கள். அந்த 'புரூபை'யும் கையெழுத்துப் பிரதியையும் ஒப்பு நோக்குவோருக்கு 'ரீடர்கள்' என்று பெயர். அவர்கள் 'புருபி'ல் செய்ய வேண்டிய திருத்தங்களைச் செய்வார்கள். அவர்கள் 'புருப்' திருத்தப் பயன்படுத்தும் சில குறிகளை இந்தப் பக்கத்தில் காணலாம்.

இந்தக் குறிகள் சுமார் எழுபது உள்ளன. அவற்றை எழுத்தாளர், அச்சுக்கோப்பவர், புரூப் படிப்பவர் முதலியோர் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். அப்போது புருப்ரீடர் செய்ய நினைக்கும் திருத்தங்களை அச்சுக்கோப்பவர் புரிந்துகொள்ள முடியும்.

*எதிர்ப்பக்கத்தில் உள்ள அச்சுப் பிழைகளை நீக்கிய பிறகு எடுத்த புரூப். இந்த இரண்டு பக்கங்களையும் எழுத்து எழுத்தாகக் கவனித்தால் புருப் குறிகளின் பொருள் புரியும்.*

ஏதேனும் மாறுதல் செய்ய வேண்டி யிருந்தால் அதை ஆசிரியர் உதவி யுடன் செய்வார். அச்சுவேலையின் நடு வில் மாறுதல் செய்வதைவிட கை-ஏட்டிலேயே செய்வது எளிது.

**அச்சுத் திருத்தங்கள்**

அச்சுக்கு அனுப்பப்படும் கை-ஏடு கூடியவரை சுத்தமாக இருக்க வேண் டும். எந்தெந்தப் பகுதி எந்தெந்த அச் செழுத்தில் அடுக்கப்பட வேண்டும், படங்கள் உள்ள இடங்கள் எவை—முதலிய குறிப்புக்களைக் கை-ஏட்டில் குறித்தால் அச்சாளருக்கு உதவியா யிருக்கும்.

அச்சுக் கோத்த பின் அச்சாளர் அனுப்பும் 'புரூப்' பிரதியைப் பதிப்பாள ரும் ஆசிரியரும் படித்துப் பார்த்து, தேவையான திருத்தங்கள் செய்வார் கள். சாதாரணமாக நேரும் அச்சுப்

பிழைகளும் அவற்றைத் திருத்தப் பயன் படும் குறிகளும் எப்படிப்பட்டவை என் பதை 42-ம் பக்கத்தில் காணலாம்.

புத்தகத்தின் விலை

அச்சுக்குக் கொடுப்பதற்கு முன் பதிப்பாளர் அச்சாளரை அணுகி நூலை அச்சிட உத்தேசமாக என்ன செல வாகும் என்பதை அறிவார். அது தெரிந் ததும், இதர செலவுகளையும் கணித்து, புத்தகத்துக்கு என்ன விலை வைப்பது என்பதைத் தீர்மானிப்பார்.

புத்தகத்தின் தேவை எவ்வளவாக இருக்கும் என்று ஊகித்து, அதற்குத் தகுந்தபடி அச்சிடவேண்டிய எண்ணிக் கையைத் தீர்மானிப்பது பதிப்பாளரே. புத்தகம் எத்தனை பிரதி அச்சானாலும், அச்சுக்கோக்கும் செலவு, படம் தயாரிக் கும் செலவு முதலியவை மாறுது. எண்ணிக்கை குறைவாக இருந்தால்

புத்தகத்தின் தனிப் பிரதியின் அடக்கச் செலவு அதிகமாக இருக்கும். அச்சிடும் எண்ணிக்கை அதிகமாக அதிகமாக, தனிப் பிரதியின் அடக்கச் செலவு குறையும்.

அடக்கச் செலவைப் பொறுத்தி ருக்கிறது புத்தகத்தின் விலே.

புத்தகத்தின் பக்கங்கள், அளவு, படங்கள், பிளாக்குகள், அச்சிடப்படும் காகிதத்தின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்திருக்கிறது நூலின் அடக்கச் செலவு.

ஆசிரியருக்கு அளிக்கப்படும் ராயல்டி சன்மானம் என்ன விகிதம் என்பதும், நூல் விற்பனே செய்வோ ருக்கு அளிக்கவேண்டிய கழிவு என்ன சதவீதம் என்பதும் தெரிந்த பிறகு புத்தகத்தின் விலே தீர்மானமாகிறது. புத்தகவிலேயில் பதிப்பாளர் தம் ஸ்தா பனச் செலவுக்காக (ஓவர்ஹெட்)

ஒரு குறிப்பிட்ட சதவீதம் கூட்டிக் கொள்வார்.

ஆக, ஒரு புத்தகத்தின் விலையில், அதன் அடக்கச் செலவு, ஆசிரியர் சன்மானம், நூல் விற்பனையாளர் பங்கு, பதிப்பாளர் ஸ்தாபனச் செலவு ஆகியவை அடங்கியுள்ளன. இந்தச் செலவுகளைத் தாண்டி மிச்சம் இருந்தால், அதுவே பதிப்பாளர் காணும் லாபம். சாதாரணமாக, புத்தக வெளியீட்டில் பதிப்பாளருக்கு, பிற தொழில்களில் போல, அதிக லாபம் கிடைப்பதில்லை.

மக்களுக்கு மிகவும் பயன்படக் கூடிய புத்தகங்கள் வெளி வருவதில் அக்கறையுள்ள அரசாங்கமோ பிற ஸ்தாபனமோ சில சமயம் குறிப்பிட்ட சில புத்தகங்களை வெளியிட பொருள் உதவி செய்வதுண்டு. அப்போது புத்தகத்தின் அடக்கச் செலவு குறையும். அதை மலிவாக விற்க முடியும்.

## நூல் விற்பனை

புத்தகத்தை வெளியிடுவது பதிப்பாளர். ஆனால் அதைப் பொதுமக்களிடம் நேரிடையே விற்பவர் புத்தக விற்பனையாளர். பல்வேறு பதிப்பாளர் வெளியிடும் பல நூல்களையும் திரட்டி, அவர் தம் கடையில் வைத்திருப்பார். பல பதிப்பாளர் வெளியிட்ட பல புத்தகங்களை வாங்க விரும்புவோர் அந்தந்தப் பதிப்பாளரை தேடிப் போகவேண்டியதில்லை. ஒரே புத்தக வியாபாரியிடம் சென்று அத்தனை நூல்களையும் பெறலாம்.

புத்தகம் வெளியிடுபவர், தம் புத்தகங்களை மொத்தமாக வாங்கி வைத்துக் கொண்டு சில்லறையாக விற்பனை செய்யும் வியாபாரிக்குக் கணிசமான கழிவு கொடுக்கிறார். சில்லறை விற்பனையை வியாபாரி ஏற்றுக்கொள்வதால் பதிப்பாளருக்குப் பல தொல்லை

கள் குறைகின்றன. அவர் தம்முடைய கவனத்தை யெல்லாம் தமது அடுத்த புத்தகத்தில் செலுத்தலாம்!

ஆனல் பதிப்பாளர் தமது நூல்கள் வெளிவந்திருப்பதை மக்களுக்கு அறிவிக்கவேண்டும். விளம்பரம் மூலமும் பத்திரிகை மதிப்புரைக்கு நூல் அனுப்பியும் இந்தச் செய்தியை புத்தக விஷயத்தில் அக்கறையுள்ளோருக்கு அறிவிப்பது அவர் பொறுப்பு, பதிப்பாளர் அவ்வப்போது வெளியிடும் புத்தகப்பட்டியல்களைப் புத்தக விற்பனையாளர் புத்தகப்பிரியர்களுக்கு அனுப்பி வைப்பார். புத்தகம் வாங்குவோர் விற்பனையாளர் மூலம் தேவையான புத்தகங்களை வாங்கிக் கொள்வார்கள்.

புத்தக வியாபாரிகளுக்கு 15% முதல் 30% வரை கமிஷன் கிடைக்கும். புத்தகத்தின் தன்மை, தொகை, ஆகியவற்றைப் பொறுத்தது கமிஷன்.

**மறுபதிப்புகள்**

ஒரு புத்தகம் நன்ருக விற்பனை யாஞல் அச்சிட்ட பிரதிகள் செலவான தும் அதை மீண்டும் அச்சிடவேண்டும், அல்லவா? இதற்கு மறுபதிப்பு என்று பெயர். மறுபதிப்புகள் அச்சிடும் போதும், முதல் பதிப்பில் போலவே எழுத்துக்களைக் கோத்து அச்சிடலாம். எழுத்து அடுக்கும் செலவையும், புருப் படிக்கும் சிரமத்தையும் காலத்தையும் தவிர்க்க, பதிப்பாளர் சில வழிகளைக் கடைப்பிடிப்பார்.

அச்சு எழுத்துக் கோத்த ஒவ்வொரு பக்கத்துக்கும் காரீய வார்ப்பு (ஸ்டீ ரியோ) எடுத்து வைத்துக் கொள்வது ஒரு முறை. புத்தகத்தை மீண்டும் பதிப்பிக்கும்போது, குறைந்த காலத்தில் மறுபடி அச்சிட, இந்த ஸ்டீரியோ வார்ப்புகள் பயன்படும். ரோடரி அச்சு இயந்திரங்களில் அச்சு எழுத்தை

உருளை வடிவ ஸ்டீரியோவாகச் செய்தே அச்சடிக்கிறார்கள் (பக்கம் 23).

ஆப்செட் அல்லது லித்தோகிராபி முறையில் (பக்கம் 9) புத்தகத்தின் மறு பதிப்பை வெளியிடுவதும் உண்டு. இதற்கு முதல் பதிப்பில் அச்சான ஒரு சுத்தமான பிரதியைக் கொண்டு போட்டோ சாதன உதவியுடன் ஆப் செட் தகடுகளைத் தயாரிக்கவேண்டும். இந்த முறையைக் கையாண்டாலும் மறுபதிப்புக்காக அச்சுக்கோக்கும் சிரமம் தவிர்க்கப்படுகிறது.

## மலிவு நூல்கள்

'நூல்களை மக்கள் வாங்கும் சக்திக்கு ஏற்ப விலை வைத்து விற்கவேண்டும். அவ்வாறு விலை வைப்பதற்குத் தகுந்தபடி சிக்கனமாக அவற்றைத் தயாரிக்கவேண்டும்' என்ற நோக்கத்துடன் உலகமெங்கும் மலிவுநூல்களைப்

பல பதிப்பாளர்கள் வெளியிடுகின்றனர். நமது நாட்டிலும் வெளிவருகின்றன.

மலிவு நூல்கள் சாதாரணமாக மலிவான காகிதத்தில் அச்சிடப்படுகின்றன. பல ஆயிரம் பிரதிகளை ரோடரி மூலமாகவோ, வேறு சிக்கன முறையிலோ அச்சிட்டால்தான் நூலை மலிவாக விற்க முடியும். புத்தகக்கட்டும் மலிவான முறையிலேயே இருக்கும். ஆனால் கூடியவரை அது உறுதியாக இருக்கும்.

ஏராளமான பேர் புத்தகத்தை வாங்கத் தயாராக இருந்தால் தானே பல்லாயிரம் பிரதிகளைப் .பதிப்பாளர் துணிந்து வெளியிடுவார்? புத்தகம் படிக்கும் பழக்கமும் ஆர்வமும் பரவினால்தான் அந்த நிலை ஏற்படும்.

நல்ல நல்ல நூல்கள் மலிவுப் பதிப்பாக வெளிவரத் தொடங்கினால் மக்கள் ஏராளமாக அவற்றை வாங்கிப் பயன்

படுத்திக்கொள்வார்கள் என்பது உறுதி. கல்வியறிவு பரவப் பரவ, நல்ல நூல்களைக் கற்கவேண்டும் என்ற அறிவுத் தாகம் பலருக்கும் எழும். பல லக்ஷம் மக்களின் அறிவுத்தாகத்தைப் போக்க வல்லது மலிவு நூல் ஒன்றே. பல யுகங்களாக மனித முயற்சியால் அறிந்த பேருண்மைகளையும் அநுபவ அறிவையும் பாமரருக்கு எடுத்துச் சொல்ல ஏற்றது மலிவு நூலே.

## அற்புத விளக்கு : மாயக் குகை

நேற்றுவரை வாழ்ந்தவருடைய அறிவும் அநுபவமும் புத்தகத்தின் மூலம் நமக்குக் கிடைக்கின்றன. அலாவுதீனின் அற்புத விளக்கைப்போல் நமக்குப் பணிபுரிய எந்நேரமும் காத்திருக்கிறது புத்தகம். அலிபாபாவின் குகைபோல 'திற' என்றதும் திறந்து, தனது அறிவுச் செல்வத்தை யெல்லாம் நம் முன்னே பரப்புகிறது புத்தகம்,

புத்தகப் பழக்கம் - வாங்குவது
படிப்பதும் - மக்களிடையே நன்கு பரவ
விட்டால், பதிப்பாளர் தரத்தில் உயர்ந்
புத்தகங்களை தைரியமாக, எளிதாக
வெளியிடுவார். புத்தகத்தின் தர
உயர்ந்தால் மக்களின் தரமும் உயரு
அன்றோ? ஏராளமான கலைக் களஞ்
யங்களும் பிற நல்ல நூல்களும் அகரா
களும் நமது நாட்டில் வெளியா
வேண்டும். நிறைய வெளியாகத்தா
போகின்றன.

அறிவின் திரு உருவான புத்தக
தயாராகும் கதை இது.

புத்தகத்தின் சக்தி மகத்தான
நாம் அதை உணர்ந்து நன்கு பய
அடைவோமாக.

M4
1057
68589

# முதியோர் இலக்கிய வரிசை

**1. நம்மை ஆள்வது யார்?**

ஆசிரியர் கே. சி. இராமசாமி, M.A., B.Com., இந்திய அரசியலமைப்பையும் ஓட்டுரிமை பற்றியும் விளக்கும் அரிய நூல். 1955-ல் மத்திய சர்க்கார் கல்வி இலாகா நடத்திய புத்தகப் போட்டியில் பாராட்டுப் பெற்றது. (Approval No. 19-33|55-B-2 dated 2-12-55) 52 பக்கங்கள் 3 விளக்கப் படங்கள் விலை ரூ. 0-75 ந. பை.

**2. போக்குவரத்துச் சாதனங்கள்:**

ஆசிரியர் கே. சி. இராமசாமி, M.A., B.Com., போக்குவரத்தின் வளர்ச்சி இந்தியாவில் போக்குவரத்துச் சாதனங்களின் நிலை ஆகிய விவரங்கள் அடங்கியது. 1956-ல் மத்திய சர்க்கார் கல்வி இலாகா நடத்திய போட்டியில் பரிசு பெற்றது. (Govt. Memo No. 16515 RDP|AI-57-4 dated 11-7-'57.) 50 பக்கங்கள். 13 விளக்கப் படங்கள். விலை ரூ. 0-75 ந. பை.

**3. சுத்தமே சுகம் தரும்:**

ஆசிரியர் என். முத்துக்குமாரசாமி, M.A., மலேரியா, யானைக்கால், நரம்புச் சிலந்தி ஆகிய நோய்களைப் பற்றிக் கூறுவது. 19 விளக்கப் படங்கள். 1956-ல் மத்திய சர்க்கார் கல்வி இலாகா நடத்திய போட்டியில் பாராட்டுப் பெற்றது. (Govt. Memo No. 76153|RDP|XI-57-1 dated 31-8-'57.) விலை ரூ. 0-75 ந. பை.

**4. கவியரசன் காளிதாசன்:**

ஆசிரியர் அ. வெ. சுப்பிரமணியன், B.SC. B.T. DIP. (S.W.) மகா கவி காளிதாசன் எழுதிய 'ரகு வம்சம்', 'குமார சம்பவம்', சாகுந்தலம்' ஆகிய காவிய நாடகக் கதைகள் கொண்டது. 30 பக்கங்கள். நாலு ஒரியண்டல் இரு வர்ண ஆர்ட் படங்களுடன் கூடியது. விலை ரூ. 0-75 ந. பை.

**அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்**

தேனாம்பேட்டை :: சென்னை-18